Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 26 வியாழக்கிழமை 11-12-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 13

# கொழும்பிலும் வடக்கு-கிழக்கிலும் ஆர்ப்பாட்டமும், உண்ணாவிரதமும்

## மனித உரிமைகள் தினத்தையொட்டி நேற்றைய தினம் நடத்தப்பட்டன

கொழும்பு, டிசம்பர் 11

மனித உரிமைகள் தினத்தையொட்டி நேற்று கொழும்பிலும் மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலையிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டங்களிலும் உண்ணாவிரதத்திலும் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 15 மனித உரிமைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் யாழ்ப்பாணத்தில் கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்களின் பாதுகாவலர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சுமார் 500 பேருக்கு மேல் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ''யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்டு'', ''கைதுசெய்த எம் பிள்ளைகளை விடுதலை செய்'' என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, நவ சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த விக்கிரமபாகுகருணாரத்தின ஆகியோரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு பாதுகாப்பு குறித்து நேற்று உயர்மட்ட மாநாடு

கொழும்பு, டிச. 11

கொழும்பு பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நடைமுறைக்கு வந்துள்ள புதிய திட்டம் குறித்து நேற்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தலைமையில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களை முறியடிக்கும் வகையில் கொழும்பு நகரில் உருவாக்கப்பட்டுள்ள ஆறு பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவந்தது.

பொலிஸ் மா அதிபர் மற்றும் முப்படைத் தளபதிகளும், வலயங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளும் இந்த மாநாட்டில் பங்குபற்றினர். (இ-21-3)

## கூட்டணி திங்களன்று முடிவு செய்யும்

யாழ்ப்பாணம், டிச. 11

யாழ். மாவட்ட உள்ளுராட்சித் தேர்தல்களில போட்டியிடுவது குறித்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். தேர்தலை ஒத்திவைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியும் கோருகிறது

கொழும்பு, டிச. 11

யாழ். மாவட்ட உள்ளுராட்சித் தேர்தல்களை ஒத்தி வைக்க அரசிடம் கோரிக்கை விடுப்பது என ஐக்கியதேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை ஐ.தே.க. நடவடிக்கைக் குழு ஸ்ரீகொத்தாவில் கூடி இத் தீர்மானத்தை எடுத்தது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு தகவல் தெரிவிக்கையில், யாழ். மாவட்ட உள்ளுராட்சித்தேர்தல்களை ஒத்திவைக்க அரசிடம் கோரிக்கை விடுக்கப்படும். அம்மாவட்ட சூழ்நிலை தேர்தல் நடைபெறுவதற்கு பாதுகாப்பானதாக இல்லை என்று கூறினார்.

தேர்தல் நடைபெறக் கூடாது என அரசிடம் விடுக்கப்படும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு தேர்தல் நடைபெற்றாலும் ஐ.தே.க. தேர்தலில் போட்டியிடமாட்டாது என்றும், அதே சமயம் ஐ.தே. க. எக்கட்சிக்கும் ஆதரவு வழங்கப் போவதுமில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-21)

## நல்லூரில் இளைஞன் சூட்டுக்கு பலி!

யாழ்ப்பாணம், டிச. 11

நல்லூர்ப் பகுதியில் நேற்று மாலை 6.30 மணியளவில் இளைஞன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரிடம் இருந்து துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும் —

இவர் பிஸ்டல் குழுவைச் சேர்ந்தவர் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## புல்மோட்டையில் படையினர் மீது தாக்குதல்

திருகோணமலை, டிச. 11

திருகோணமலை, புல்மோட்டையில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் படையினர் ஒருவர் காயமடைந்தார்.

அதேசமயம் மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் சித்தாண்டியில் இனந்தெரியாதவர்களால் நேற்று வாகனம் ஒன்று கடத்தப்பட்டது.

இதில் பயணம்செய்த நால்வரும் இறக்கி விடப்பட்டு வாகனம் கடத்தப்பட்டதாக ஏறாவூர் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ-21)

## வன்னி நிலைவரம் குறித்து ஐக்கியதேசியக்கட்சி ஆராயும்

### தொண்டர் அமைப்புக்களுடன் சந்திப்பு

கொழும்பு, டிச. 11

வன்னியில் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை நீக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களுடனான சந்திப்பு ஒன்றை ஐ. தே. க. ஏற்பாடு செய்துள்ளது.

இந்தச் சந்திப்பு நாளை கொழும்பில் உள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. டி. பி., புளொட், இ. தொ. கா. ஆகியனவும் பங்குபற்றவிருக்கின்றன.

வன்னி மக்களுக்குத் தேவையான உணவு, மருந்துப் பொருள்களை அரச சார்பற்ற அமைப்புக்கள் ஊடாக அனுப்புவது என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தலைமையில் கூடிய மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அரச சார்பற்ற அமைப்புக்களின் நிலைப்பாடு இச்சந்திப்பில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

# கடல்கண்காணிப்பு நடவடிக்கை கிழக்கில் பலப்படுத்தப்பட்டது!

கொழும்பு, டிச. 11

கிழக்குமாகாணத்தில் கடல் கண்காணிப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கட்டளையிடும் அதிகாரி சரத்வீரசேகரா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு இரு கப்பல்களில் ஆயுதங்கள் எடுத்து வரப்பட இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் —

இந்தத் தகவல்களையடுத்து ஹெலிக்கொப்டர்கள், கடற்படை ரோந்து கண்காணிப்புகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். (இ-2)

## வவுனியாவில் துப்பாக்கிச்சூடு

வவுனியா, டிச. 11

வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதியில் மதுபான விற்பனை நிலையம் ஒன்றின் முன்பாக நேற்று இரவு 8மணியளவில் இனந்தெரியாதோரால் ஒருவர் சுடப்பட்டார்.

இவர் காயம் அடைந்த [illegible] இறார். (இ-164)

## முஸ்லிம் காங். போட்டியிடாது

யாழ்ப்பாணம், டிச. 11

யாழ்.மாவட்டத்தில் நடைபெற உள்ள உள்ளுராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து வெளி மாவட்டங்களில் உள்ள முகாம்களில் வசிப்பதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் — தேர்தலில் போட்டியிடுவதில்லை என தீர்மானிக்கப்பட்டாலும் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன (இ-21)

# பௌசி மீது வழக்கு!

கொழும்பு, டிச. 11

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி மீது ஹம்பாந்தோட்டை நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி நிமால் விஜயசூரிய உட்பட 9 வழக்கறிஞர்கள் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

கொழும்பு — கதிர் காமம் வீதியில் ஹம்பாந் தோட்டைக்கும் மிருகவெலவுக்கும் இடையே தேங்கி நிற்கும் மழை நீரை கடந்த மாதம் 7 ஆம் திகதியில் இருந்து வெளியேற்றுவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் —

இதன் மூலம் அமைச்சர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக்காயத்துடன் இளைஞன் சடலம்

வடமராட்சி, டிச. 11

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இனந்தெரியாத இளைஞர் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெஸ்பியன் கலைவட்டம்

### மாதாந்த அறிவியற் கருத்தரங்கு

தொடர் — 12

தலைப்பு: ''திருவடி சூட்டு படலம்''

கருத்துரை வழங்குபவர்:

திரு. ஆறு திருமுருகன் B.A.

இடம்:- யா/ இணுவில் மத்திய கல்லூரி மேற்பிரிவு மண்டபம்

காலம்:- 12—12—97 வெள்ளி மாலை 3.00 மணி

★ AL/ பாடத்திட்டத்துக்கமைவாக

தெஸ்பியன் கலை வட்டம்

இணுவில். (51739)

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் கந்தசாமி நடராசா

அச்சுவேலி, கதிரிப்பாயைச் சேர்ந்த வ. க. நடராசா 02-12-97 அன்று விசுவமடுவில் காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், சண்முகராசா (ஆசிரியர், கிளிநொச்சி), இந்திரகுமார் (இலங்கை வங்கி, பருத்தித்துறை), சக்திவேல், சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), உருத்திரகுமார் (பிரான்ஸ்), மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்

அன்னாரது இறுதிக் கிரியைகள் விசுவமடுவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. இந்திரகுமார் (மகன்)

அரசடி வீதி,
பருத்தித்துறை. (51736)

### நடராசா விவேகம்மா (மணி)

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா விவேகம்மா (மணி) 10-12-97 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், விஜயகுமார் (ஜேர்மனி), ராசகுமார் (ஹொலண்ட்), மங்களேஸ்வரி (ஜேர்மனி), ஜெயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாதசுந்தரம், ராமச்சந்திரன், ஈஸ்வரலிங்கம், காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-12-97) மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. அலங்காரம் (சகோதரி)

3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (51749)

### ஜெயகாந்தன் தேவி

புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த (ஆண்டு 3) ஜெயகாந்தன் தேவி காலமானார்.

இவர் ஜெயகாந்தன் சாந்தி ஆகியோரின் அன்பு மகளும், வைதேகி, பிரியங்கா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அவரின் பூதவுடல் 16, ஆசீர்வாதம் ஒழுங்கையில் இருந்து (ஆஸ்பத்திரி வீதி) இன்று காலை 11-12-97 10-00 மணியளவில் இறுதிக் கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஈ. ஆர். திருச்செல்வம்

16, ஆசீர்வாதம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி/2318)

### கோணாமலை சின்னத்துரை

அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கோணாமலை சின்னத்துரை 6-12-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் மற்றும் சபாரத்தினம், சரஸ்வதி, நடராசா அன்னம்மா (கனடா—இளைப்பாறிய ஆசிரியை, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை), இலக்குமிதேவி (குடும்ப நல சேவை மேற்பார்வை உத்தியோகத்தர் — பருத்தித்துறை சுகாதாரப் பணிமனை), இராசரத்தினம் (அஞ்சலதிபர், சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையு, செல்வநாயகம் (கனடா), ஜெயமோகன் (கனடா), ஜெயகாந்தன் (கனடா), இன்பராணி, புஸ்பராணி, சிறீதரன் (கனடா), சம்பிகா, பிருந்தா, ஜானகி ஆகியோரின் அன்புப் பேரனும், அனிற்றா (கனடா), சுவாஸ்கர் (கனடா), மாதுரி (கனடா), நட்ரீசா (கனடா), சுதர்சன், சத்தியன், பிரதீபா, அருபி, சஞ்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு இன்று (11-12-97) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. இராசரத்தினம்
(அஞ்சலதிபர், சுன்னாகம்)

மாலிசந்தைப் பிள்ளையார் கோயிலடி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய். (51738)

---

ரகம் ரகமான ராகங்கள்தான் ரகம் நிறைந்த வாழ்வின் சாரம்
ஆம்
விதம் விதமான ஆடைகளின் ஆசையை நிறைவேற்ற நாடவேண்டியது

★ ராகம்ஸ் பட்டுச்சோலை ★

ஓராம் அகவையிலே ஒய்யாரமாய் நடை போட்டு
ஈராம் ஆண்டில் இன்பமாய் நடை பயில — என்றும்
அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவரினதும் ஆதரவை நாடிநிற்கிறது

## ராகம்ஸ் பட்டுச்சோலை

இல. 24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

வரவிருக்கும் நத்தார் — புதுவருட நாள்களில் — நீங்கள்
குடும்பமாய்க் குதூகலித்து மகிழ, அணிந்து மகிழவேண்டியது
ராகம்ஸ் பட்டுச்சோலையினரின் ஆடைத்தெரிவுகளையே!

**ஓராம் ஆண்டு நிறைவு நாளான இன்று**

ராகம்ஸின் வளர்ச்சிக்கு வழிகோலிய அனைவருக்கும் நன்றி கூறும்

**ராகம்ஸ் பட்டுச்சோலை**

நிர்வாகத்தினர். (சி/2321)

---

## ATCHUVELY LIBERTY CINEMA

### SUPER WIDE SCREEN (30 Feet) SHOW

### OPENING CEREMONY

## குதூகல திரைப்படத் திறப்புவிழா

இடம்:- அச்சுவேலி லிபேட்டி சினிமா

காலம்:- 12-12-1997 [வெள்ளிக்கிழமை] மு.ப. 10 மணி

கௌரவவிருந்தினர்கள்:

| | |
|---|---|
| திரு. க. கேதீஸ்வரன் | விசேட ஆணையாளர், வலி. கிழக்கு பிரதேச செயலகம். |
| திரு. க. குகதாசன் | செயலாளர், பிரதேச சபை நீர்வேலி தலைமை அலுவலகம். |
| திரு. தம்பித்துரை | அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், அச்சுவேலி பிரதேச சபை. |

நிகழ்ச்சி:

கௌரவவிருந்தினர் மங்கள விளக்கேற்றி திறந்துவைப்பார்கள்.

படம்:- **சூரியவம்சம்**

காட்சி நேரம் தினசரி மு. ப. 10.30 பி. ப. 2.30
[பழைய நேரம்]

இலங்கையில் முன் எப்போதும் காண்பிக்கப்படாத நவீன கருவி மூலம் (PROJECTOR) அதிவிசேட அகலத்திரையில் காட்சி காண்பிக்கப்படும். ரசிகர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

S. K. நல்லதம்பி
உரிமையாளர்.
லிபேட்டி சினிமா, அச்சுவேலி. (51741)


---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
சின்னத்துரை அரியதாஸ்

மலர்வு: 09—04—1978
உதிர்வு: 21—12—1996



செல்வன்
சிவபாதம் சுதாகரன்

மலர்வு: 08—12—1975
உதிர்வு: 21—12—1996

திதி: 11—12—1997

ஓராண்டு கடந்தாலும் உங்கள் முகம் மறக்கவில்லை
சீரான உம் வாழ்வை இடை நடுவில் பறித்தனரோ!
மாறாதே நம் மனக்கவலை மனம்விட்டு அழுகின்றோம்!
தீராத வேதனைதான் நீர் தந்த செல்வம் ஐயா?

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும் அம்மா, அக்கா, தம்பி, தங்கை,
மற்றும் நண்பர்கள், அயலவர்கள்.

மறவன்புலோ,
சாவகச்சேரி. (சி/2320)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னகுளம் சண்டையில் நடந்தது என்ன?

# இராணுவ ஆய்வாளர்கள் தரும் தகவல்கள்

கொழும்பு இராணுவ ஆய்வாளர்கள், செய்தியாளர்கள் மட்டத்தில் இந்த வாரத்தில் பரபரப்பாகப் பேசப்படுவது கடந்த வியாழக்கிழமை வன்னி மன்னகுளம் பகுதியில் புலிகள் நடத்திய தாக்குதல்தான்.

இத்தாக்குதல் நடந்து இன்றுடன் ஒருவாரம் பூர்த்தியாகின்ற போதிலும் இச்சமரின் பெறுபேறு குறித்து இராணுவ வட்டாரங்களில் ஏற்பட்ட அதிர்ச்சி அலைகள் இன்னும் நீங்கவில்லை.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு பாதுகாப்பான தரைவழி விநியோகப்பாதை ஒன்றைத்திறப்பதற்கு ஸ்ரீலங்காப் படைகள் பலகட்டங்களாக நடத்தும் 'வெற்றி உறுதி' படை நடவடிக்கை இப்போது மூன்றாவது கட்டத்தை எட்டியிருக்கின்றது.

இதுவே இறுதிக் கட்டத் தாக்குதல் என்றும் —

இத்தாக்குதலுடன் தரைவழிப்பாதையைத் திறப்பதான இலக்கு எட்டப்பட்டு விடும் என்றும் —

அநேகமாக இந்நடவடிக்கை இம்மாதத்துடன் — அதாவது இந்த வருட இறுதியுடன் — பூர்த்தியாகிவிடும் என்றும் —

அரசுத் தரப்பில்—பொறுப்பான பதவிகளில் இருப்போர் — பகிரங்கமாக அறிவித்து வந்தது தெரிந்ததே.

ஆனால் மன்னகுளம் தாக்குதல் இந்த இலக்கு எட்டப்படுமா என்பது குறித்தும், குறிப்பிட்ட கால வரையறைக்குள் படையினரால் தரைப்பாதையைத் திறக்க முடியுமா என்பது குறித்தும் பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்திருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இலங்கை சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியடைவது — பொன்விழா சுதந்திர தினம் — எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி வருகின்றது. அதற்கு இன்னும் ஐம்பத்தாறு நாள்களே உள்ளன. பொன்விழா சுதந்திர தினத்திலாவது யாழ்ப்பாணத்துக்கு பாதுகாப்பான தரைவழிப்பாதை திறக்கப்படுமா என்பது சந்தேகமே என்று இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

### ஆறு தாக்குதல்கள்

வன்னியில் அகலக் கால் விரித்து பரந்து பட்டுவரும் படையினர் மீது அவ்வப்போது புலிகள் அதிரடியாக ஊடுருவி பெரும் தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றார்கள்.

''வெற்றி உறுதி'' ஆரம்பிக்கப்பட்டு 212 நாள்கள் கடந்து விட்ட நிலையில் இது வரை இத்தகைய ஆறுபெரிய ஊடுருவல் தாக்குதல்களை புலிகள் நடத்தியிருக்கின்றார்கள். அவை ஒவ்வொன்றும் 'செய் அல்லது செத்துமடி I,' 'செய் அல்லது செத்துமடி II,' என்ற வரிசையில் 'செய் அல்லது செத்துமடி VI,' என்பது வரை புலிகள் பெயரிட்டிருக்கின்றார்கள்.

இத்தாக்குதல்களில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை விவரம் குறித்து கொழும்பு செய்தி வட்டாரங்கள் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

★ 'செய் அல்லது செத்துமடி I'' (ஜூன் 10 ஆம் திகதி):- 180 படையினர் பலி; 27 படையினர் காணாமற் போயினர்; 320 படையினர் காயம்.

★ ''செய் அல்லது செத்துமடி II'' (ஜூன் 24 இல் ஓமந்தை இறம்பைக் குளம் பகுதியில்):- 75 படையினர் பலி; 201 படையினர் காயம்.

★ ''செய் அல்லது செத்துமடி III'' (ஓகஸ்ட் முதலாம் திகதி ஓமந்தை, புளியங்குளம் மேற்கு முன்னணிக் காவலரண்கள் மீது) :-பொலீஸார் உட்பட 70 படையினர் பலி.

★ ''செய் அல்லது செத்துமடி IV'' (செப்ரெம்பர் 30 ஆம் திகதி கரப்புக்குத்தி பகுதியில்) 48 படையினர் பலி; 20 படையினர் காணாமற் போயினர்; 308 படையினர் காயமுற்றனர்.

★ 'செய் அல்லது செத்துமடி V (ஒக்ரோபர் 6 ஆம் திகதி கரிப்பட்டி முறிப்பு மற்றும் விநாயகுளம் பகுதியில்) முப்பதுக்கு குறையாத படையினர் உயிரிழந்தனர்; 42 படையினர் காயமடைந்தனர். 53 ஆவது படையணியின் சிரேஷ்ட கட்டளைத் தளபதி பிரிகேடியர் வசந்த பெரேராவின் நகரும் கட்டளைத்தள வாகனமாகச் செயற்பட்ட— குளிரூட்டப்பட்ட— இராணுவ வாகனம் உட்பட பெரும் தொகையான ஆயுதங்கள், வெடிப்பொருள்கள், இராணுவத் தளபாடங்கள் இத்தாக்குதலின் போது புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

★ செய் அல்லது செத்துமடி VI(இத்தாக்குதல் கடந்த வியாழனன்று புதூருக்கு வடகிழக்கே சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் உள்ள மன்னகுளம் பகுதியில் நடத்தப்பட்டது, மொத்தம் இரு நூறு படையினர் உயிரிழந்திருக்கலாம் அல்லது காணாமற் போயிருக்கலாம் என்றும், நானூறு பேர்வரை படுகாயமுற்றதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது 'வெற்றி உறுதி' நடவடிக்கையிலிருந்து இத்தாக்குதல் மூலம் மொத்தம் அறுநூறு துருப்பினர் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ வெளியேற்றப்பட்டிருக்கின்றார்கள்.

மன்னகுளம் சமரின் பெறுபேறுகளை ஆராய முன்னர் அச்சமரில் உள்ள முக்கிய அம்சம் ஒன்று இராணுவ ஆய்வாளர்களை வியப்பில் ஆழ்த்தியிருப்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

வன்னியில் முன்னேறிய துருப்புகள் பரந்த நிலை கொண்டு தற்காப்பு நிலைகளில் இருந்த சமயம் — அதிரடியாக ஊடுருவி — திடீரென நடத்தும் தாக்குதலாகவே 'செய் அல்லது செத்துமடி I'' முதல் 'செய் அல்லது செத்துமடி V' வரையான ஐந்து தாக்குதல்களையும் புலிகள் மேற்கொண்டனர்.


ஆனால் ஆறாவது தாக்குதல் சற்று வித்தியாசமாக நடந்துள்ளது.

வழக்கமாக பெரிய எடுப்பில் படையினர் முன்னேறி மோதும் போது புலிகள் பின்வாங்கி மோதலைத் தவிர்த்துக் கொள்வர். அல்லது தற்காத்துக் கொள்ள பாதுகாப்பான நிலைகளில் இருந்து கொண்டு ஆங்காங்கே பதில் தாக்குதல் நடத்துவர்.

## பாசுபதன்

ஆனால் அத்தகைய சந்தர்ப்பங்களில் முன்னேற முயலும் படையினருக்குள் ஊடுருவி அவர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தி அரச படையணிகளை அழிக்க புலிகள் முயற்சிப்பதில்லை; அல்லது புலிகளுக்கு முடிவதில்லை.

இதற்கு முக்கிய காரணம் மரபுச் சமர் அடிப்படையில் பெருத்த எடுப்பில் முன்னேறும் அரச படைகளை மரபுச் சமர் ரீதியில் எதிர்




கொள்வதற்குத் தேவையான ஆளணி மற்றும் கனரக வாகனங்கள், ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள், வான் தாக்குதல் வசதிகள் போன்றவை புலிகளுக்கு இல்லாமையே என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

எனினும் தமக்கே உரித்தான இராணுவ தந்திரோபாய உத்திகள் மூலம் புலிகள் ஸ்ரீலங்காப் படையணியின் மரபுச் சமர் ரீதியான பலத்தை ஆங்காங்கே எதிர்கொண்டு முறியடித்து வருகின்றார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

அந்த வரிசையில் ஒன்றாகவே மன்னகுளம் தாக்குதலைக் கருதவேண்டியிருக்கின்றது.

முன்னேறிய படையினர் நிலை கொண்டிருந்த படையினர் மீது திடீர் —அதிரடி — ஊடுருவல்கள் மூலம் சேதத்தை ஏற்படுத்தி வந்த புலிகள் —

முதல் தடவையாக மன்னகுளத்திலேயே பெருத்த எடுப்பில் நகர்ந்த படையணியை எதிர்கொண்டு அதனுள் ஊடுருவி, அந்தப் படையணிக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தி, படை நகர்வையும் முறியடித்திருக்கின்றார்கள்.

இவ்வாறு புலிகளால் சாதிக்க முடிந்தது எங்ஙனம்?

இக்கேள்விக்கு கொழும்பு இராணுவ ஆய்வாளர்கள் விளக்கம் தருகின்றார்கள்.

மன்னகுளத்தில் புலிகள் விரித்த வலையில் படையினர் வீழ்ந்து விட்டதாக பிரபல இராணுவ ஆய்வாளர் தராக்கி கூறுகின்றார்.

அண்மைக்காலத்தில் வன்னி மீது ஆளில்லா உளவுவிமானங்களை அனுப்பி அவை கொடுக்கும் தகவல்களை அடிப்படையாக வைத்தே அங்கு படையினர் திடீர்த் தாக்குதல்களைத் தொடுத்து வந்தனர் என்பது ஊரறிந்த ரகசியம்; படையினரின் தாக்குதல் நடவடிக்கைத் திட்டங்கள் கூட பெரும்பாலும் இவ்வாறு வான்வழியாகத் திரட்டப்படும் தகவல்களிலேயே தங்கியிருந்தது.

முல்லைக்கடலில் புலிகளின் கப்பல் தகர்ப்பு, அண்மையில் மாங்குளத்தில் புலிகளின் எரிபொருள் நிலையம் அழிப்பு போன்றவை இத்தகைய தாக்குதல் திட்டங்களுக்கு உதாரணங்கள்.

படையினரின் இந்தப்போக்கைப் பயன்படுத்தியே அவர்களை தமதுவலைக்குள் வீழ்த்தியிருக்கின்றார்கள் புலிகள்.

வல்லைவெளியிலும், கைதடி —நாவற்குழி வெளிப் பகுதிகளிலும் மாதிரி இராணுவ முகாம்களை—இராணுவத் தளங்களை ஒத்த அமைப்புக்களை—சில வருடங்களுக்கு முன்னர் புலிகள் அமைத்து மக்களின் பார்வைக்கு வைத்தது குடாநாட்டு மக்களுக்கு நினைவிருக்கலாம்.

அத்தகைய மாதிரி படைத்தளம் ஒன்றை படையினர் நிலைகொண்டிருந்த புதூர் பகுதிக்கு அண்மையில்—மன்னகுளம் பிரதேசத்தில் — புலிகள் அமைத்ததாகக் கூறப்படுகின்றது.

கனரக வாகனங்கள் பீரங்கி —மோட்டார் நிலைகள், காவலரண்கள் போன்றவற்றை மட்டைகளில் செய்து வானத்திலிருந்து பார்த்தால் புலிகளின் பெரும் தாக்குதல் தளம் — கனரக வாகனங்கள், வசதிகளுடன் — இருப்பது போன்ற மாயத்தோற்றத்தை புலிகள் ஏற்படுத்தியதாகக் கூறப்படுகின்றது.

நேரடி உளவுத் தகவல்களைப் பெறுவதற்கு வேறு வழி, வாய்ப்புற்ற அரச துருப்புகள், ஆளில்லா உளவு விமானம் எடுத்து அனுப்பிய படங்களின் அடிப்படையில் மன்னகுளம் பகுதியில் புலிகளின் பெரும் தளம் ஒன்று இருப்பதாக முடிவு செய்ததாகக் கூறப்படுகின்றது.

மன்னகுளம் பகுதிக்கு அவ்வப்போது தாம் கொண்டு வந்து—கொண்டு செல்லும் —பீரங்கிகள் மற்றும் மோட்டார்கள் மூலம் அங்கிருந்தபடியே இடைக்கிடை புலிகள் தாக்குதல் நடத்தியும் புலிகளின் பெரும் தளம் மன்னகுளத்தில் இருப்பது போன்ற கருத்தை வலுவூட்டியதாகக் கூறப்படுகின்றது.

தமது முன்னணிக் காவலரண்களில் இருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் மன்னகுளத்தில் புலிகளின் பெரும் தளம் இருப்பதாக கருதிக்கொண்ட படைத் தலைமைப் பீடம், புலிகளை ஆச்சரியப்பட வைக்கும் விதத்தில் திடீர் நடவடிக்கை ஒன்றின் மூலம் அதை சுற்றி வளைத்து கைப்பற்றி, அங்கிருக்கும் புலிகளை அழித்து, ஆயுதங்களைக் கைப்பற்றி, புலிகளின் மொத்தப் பலத்தை குறைக்க திட்டம் ஒன்றைத் தீட்டியது

புலிகள் தங்களுக்கு வலை விரிப்பதைப் புரியாமல், புலிகளுக்கு தாம் வலை விரிப்பதாகக் கருதிக் கொண்டு புதூரில் இருந்து படையணி மன்னகுளம் நோக்கி முன்னேறியது.

படையினரின் நகர்வை எதிர் பார்த்திருந்த புலிகள் தமது மாதிரி முகாமுக்கு வெளியே பாதுகாப்பான நிலைகளில், உருமறைப்புச் செய்து கொண்டு காத்திருந்து, களத்தில் குதித்ததாகக் கூறப்படுகின்றது.

புலிகளின் போலியான தளத்தை தாக்கி அழித்தபடி முன்னேறி அதற்குள் நுழைந்த அரச துருப்புக்கள், தாங்கள் தேடி வந்த இடத்தில் இருப்பது போலித் தளம் என்பதை உணரத் தொடங்கிய சமயம் அப்பிரதேசத்தைச் சுற்றியுள்ள பகுதியில் மிக நன்கு பாதுகாப்பாக இருந்து கொண்டு புலிகள் தாக்கத் தொடங்கினராம்.

அதுவே படைகளுக்கு பேரழிவைத் தந்ததற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

மன்னகுளம் சமர் குறித்து தகவல் வெளியிட்ட அரச தரப்பு—

''புலிகளின் இரு பீரங்கி நிலைகளைத் தாக்கி அழித்து விட்டு வந்த படையணிகள் மீது புலிகள் சுற்றி வளைத்துத் தாக்கியதாக'' ஆரம்பத்திலும் —

''புலிகள் நன்கு பாதுகாப்பான நிலைகளில் இருந்து கொண்டு முன்னேறிய அரச துருப்புகள் மீது தாக்குதல் நடத்தியதாக'' — பின்னரும் —

தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

''புலிகளின் இரு பீரங்கி நிலைகளை படைகள் முன்னேறி அழித்ததாக'' முதலில் குறிப்பிட்ட அரச

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

'ஈச்சாகம்' கட்டில்கள், கதிரைகள், மேசைகள். பெட்டிகள், பலகைகள், கிடாரங்கள், அம்மிகள், பல தள பாடங்களும், காய்ந்த கொத்திய வேப்பம் விறகும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சு. கதிரித்தம்பி, 16/5, சீனியர் லேன், வண்ணார் பண்ணை. [51667]

### தவறிவிட்டது

பொன்ராசா விஜயா என்பவரது விசேட அடையாள அட்டை ஐந்து சந்திக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 519, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (இரத்தினம் கடை) என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [51720]

### காணவில்லை

தெல்லிப்பழையைச் சேர்ந்த தவராசசிங்கம் என்பவரது 090701236 இலக்க விசேட அடையாள அட்டை, 500020318V தேசிய அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. சுன்னாகம் ஸ்ரேசனடியிலுள்ள ராமு கடையில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். [51712]

### வர்த்தக வகுப்புக்கள்

O/L 98 மாணவர்களுக்கானவை பிரபல ஆசிரியரால் 15-12-97 முதல் ஆரம்பிக்கப்படும். தொடர்பு: பொற்பதி வீதி (பிள்ளையார் கோயில் அருகில்), கொக்குவில். [51710]

### உடன் விற்பனை

12 நாளைகள் வளர்ச்சியடைந்த பிறிமா புரோயிலர் குஞ்சுகள், பிறவுண், வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. 'மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (51675)

### O/L 98 ஆங்கிலம்

O/L 98 மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள் பிரபல ஆசிரியரால் 15-12-97 முதல் ஆரம்பிக்கப்படும். தொடர்பு: பொற்பதி வீதி (பிள்ளையார் கோயில் அருகில்), கொக்குவில். [51709]

### திருமணசேவை

எங்களுடன் தென்மராட்சி, வடமராட்சியில் தொடர்பு கொண்டவர்களும் நேரில் சந்திக்கவும், காலை 7 மணி தொடக்கம் 12 மணிவரை, மாலை 1 மணி தொடக்கம் 5 மணிவரை தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (51672)

## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் தனது 1998 ஆம் ஆண்டுக்கான பொதிகள் ஏற்றுவதற்கான லொறிச் சேவைக்கான விண்ணப்பங்களை ரெண்டர் மூலம் கோருகின்றது. விண்ணப்பப்பத்திரம் பிரதமசங்கத்தில் பெற்று பூர்த்தி செய்து 24 . 12 . 97 ஆம் திகதிக்கு முன்பு பொது முகாமையாளரிடம் சேரல் வேண்டும். கேள்விப் பத்திரம் பெறுவதற்கு ரூபா 150 செலுத்த வேண்டும். இப்பணம் மீள் அளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படுபவர் பிணை ரூபா 2500 செலுத்தி சங்கத்துடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,

தென்மராட்சி கிழக்கு ப.நோ. கூ.சங்கம்,
கொடிகாமம்,
08 . 12 . 1997.

[சி/2308]

## MATHS CENTRE

ம. ம. வி. வீதி, - நெல்லியடி

புதிய வகுப்புக்கள் - 1998

★ ஆண்டு 5 தொடக்கம் 11 வரை

★ ஆண்டு 5- க்கான விசேட புலமைப் பரிசில் வகுப்புக்கள்

★ விடுமுறை நாள்களில் விசேட கணித, விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறும்.

ஆரம்பம்: 12-12-97 வெள்ளி 3.00 P. M.

- நிர்வாகி

(சி/ 2316)

## சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 11

நல்லூர் பிரதேச சபை நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் உப அலுவலக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

''உணவு, நீரினால் பரவும் நோய்'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறைத் தலைவர் வைத்தியக் கலாநிதி என். சிவராசா உரையாற்றுவார். (ஐ)

## படையினர் ஒருவர் பலி

நேற்று முன்தினம் மட்டக்களப்பு - புனானை பிரதான வீதியில் வீதிச் சோதனையில் ஈடுபட்ட படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில் படையினர் ஒருவர் கொல்லப்பட்டார்; அவரின் சடலத்தையும் ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

'' புலிகளின் குரல்'' வானொலி இவ்வாறு அறிவித்தது. (உ-164)

## MODERN EDUCATION CENTRE
## NELLIADY, KARAVEDDY.

புதிய கல்வியாண்டு - 1998

ஆண்டு 5 முதல் 9 வரையான வகுப்புகள்

ஆரம்பம்: 12-12-1997

வெள்ளி காலை 8 மணிக்கு

★ ஆண்டு 5 இற்கான விசேட புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

## SCIENCE CENTRE
## NELLIADY, KARAVEDDY.

புதிய கல்வியாண்டு - 1998

ஆண்டு 10—11 வரையான வகுப்புக்கள்

ஆரம்பம்: 10-12-1997

புதன்கிழமை

★ எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் ஆரம்பம்.

★ A/L 2000 வகுப்பிற்கான கணித உயிரியல் பாடங்கள் ஆரம்பமாகவுள்ளன.

- நிர்வாகி

(சி/2315)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1997-12-31 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**பதவிகள்:**

விளையாட்டுப் பயிற்றுநர் துடுப்பாட்டம் (ஆண்கள்) / உதைபந்தாட்டம் (ஆண்கள்) / சதுரங்கம் (ஆண்கள், பெண்கள்)/ கரபந்தாட்டம் (ஆண்கள்) வலைப்பந்தாட்டம் (ஆண்கள்) / கராட்டி (ஆண்கள்) / தாச்சி(ஆண்கள், பெண்கள்)

**கொடுப்பனவு விகிதம்:**

மணித்தியாலம் ஒன்றிற்கு 75/- ரூபா. (மாதமொன்றிற்கு 900/-ரூபா உச்சவரம்பிற்குஉட்பட்டு)

**தகைமைகள்:**

1. தேசிய அணி ஒன்றையோ மாவட்ட அணியொன்றையோ, தேசிய பாடசாலை அணியொன்றையோ, இணைந்த பாடசாலை அணியொன்றையோ பிரதிநிதித்துவப்படுத்தியிருத்தல் வேண்டும்.

அல்லது

2. மாவட்ட அணியையோ மாவட்ட இணைந்த அணியையோ மூன்றாண்டுகளுக்குக் குறையாத காலத்திற்குப் பயிற்றியிருத்தல் வேண்டும்.

அல்லது

3. விளையாட்டுத்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட பயிற்றுனராக குறைந்தபட்சம் மூன்றாண்டுகளுக்குப் பயிற்றுதலில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

4. பல்கலைக்கழக மட்டத்தில் விளையாட்டுக்களைப் பயிற்றுதலில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

5. பாடசாலையொன்றில் அல்லது கழகமொன்றின் ஐந்தாண்டுப் பயிற்றுதல் அனுபவத்துடன் குறைந்த பட்சம் மூன்றாண்டுகளுக்கு மாவட்ட விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி ஒன்றின் வீரமுதல்வரை அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்ற வரை உருவாக்கி இருத்தல் வேண்டும்..

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கியில் அல்லது நிதிக் கிளையில் சிறாப்பரின் முகப்பு மேசையில் 20 ரூபாவை செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் ஸிரேட்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் இதர விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளர் பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளை/ தபாற் கட்டளையொன்றை 23x10 ச. மீ அளவுடைய சுயமுகவரியிடப்பட்ட ரூபா 2-50 முத்திரையொட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவத்தில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விவரங்கள் எழுதப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குறிப்பு: சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1997 - 12 - 02

(சி-2307)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஈசுர வருஷம் கார்த்திகை மாதம் 29ஆம் நாள் (14-12-1997) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-38 மணி முதல் 12-11 மணி வரையில் வரும் மகரலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது சகோதரன்<br>திருநிறை செல்வன்<br>**சாந்தரூபன்**<br>(கிராம அலுவலர்)<br>(தம்பாளை - கதிரிப்பாய் J/282)<br>அவர்களுக்கும் | எமது ஏகபுத்திரி<br>திருநிறை செல்வி<br>**ஞானகலை**<br>அவர்களுக்கும் |

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள், தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ 15-12-1997 திங்கட்கிழமை பி. ப. 3-00 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

★ இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்: ★

திரு. திருமதி
தவராசா சுமித்திராவும்.
மற்றும் மணமகனின் சகோதரர்களும்.
சாந்தாதோட்டம்,
ஆவரங்கால், புத்தூர்.

திரு. திருமதி
சின்னத்தம்பி, இராசமணி
இராசமணி இல்லம்,
கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.

(இருவீட்டார் அழைப்பு) (51716)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு ஆதரவாக
# இந்திய தலைநகரில் மாநாடு

## ஞாயிறன்று நடக்கின்றது

புதுடில்லி, டிச. 11

ஈழத் தமிழரின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இந்தியத் தலைநகர் புதுடில்லியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஒருநாள் சர்வதேச மாநாடு நடைபெறவிருக்கின்றது.

உலகின் பல நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்குபற்றவிருக்கின்றார்கள்.

சமதாக்கட்சித் தலைவரும் இந்திய முன்னாள் அமைச்சருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இந்த மாநாட்டை முன்னின்று நடத்துகின்றார். ஈழத்தமிழர் போராட்டத்துக்கு ஆதரவான சர்வதேச அமைப்பு இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம், தமிழர் நடவடிக்கைக் குழுச் செயலாளர் கலாநிதி எஸ்.சதானந்தன், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ் ராமதாஸ், முன்னாள் இந்திய தலைமை நீதியரசர் மணி ஐயர், முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் வெங்கடேஸ்வர் ஆகியோரும் —

பிரிட்டன், அமெரிக்கா பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து தலா ஒவ்வொரு பிரதி நிதிகளும் இந்த மாநாட்டில் பங்கு பற்றி உரையாற்றவிருக்கின்றனர்.

இந்த மாநாட்டில் ''இலங்கையில் மனித உரிமை மீறல்கள்'' என்ற தலைப்பில் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. உரை நிகழ்த்துவார்.

(உ-3)

# அமரர் எம்.ஜி. ஆரின் நினைவு தின ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 11

முன்னாள் தமிழக முதல்வர் எம். ஜி, இராமச்சந்திரனின் 10 ஆவது ஆண்டு நினைவு நாள்விழா எதிர்வரும் 24ஆம் திகதி தாவடிப் பகுதியில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

அன்றைய தினம் காலை குருநகரில் உள்ள எம்.ஜி.ஆர், அண்ணா ஆகியோரின் சிலைகளுக்கு மாலை அணிவிப்பு நிகழ்ச்சி இடம் பெறும்.

அன்று மாலை தாவடி திறந்த வெளியரங்கில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெறும் என்றும்- அப்பேரவையின் தலைவர் பொன். மதிமுகராசா தெரிவித்தார்.

விழா நிகழ்ச்சிகளை ஒட்டி அன்றைய தினம் இரவு ஊரடங்கைத் தளர்த்துமாறு படை அதிகாரியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-3)

### தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர்நீத்த
# ஒன்பது பேர் நினைவுத்தூபியை புனரமைப்புச் செய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 11

1974ஆம் ஆண்டுயாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் போது கொல்லப்பட்ட ஒன்பது பேரின் ஞாபகார்த்தமாக யாழ். முற்றவெளிப் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை 'புளொட்' அமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

புளொட் அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர் சுந்தரம் (சிவசண்முகமூர்த்தி), தளப் பிரதேச தளபதி மென்டிஸ் (விஜயபாலன்) ஆகியோரின் நினைவாக இப்புனரமைப்புப் பணியை தமது அமைப்பு மேற்கொள்ளவுள்ளதாக புளொட்டின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா தெரிவித்தார்.

புனரமைத்து விரிவுபடுத்தப்படவுள்ள இந்த நினைவுத் தூபி தமிழாராய்ச்சி மாநாடு படுகொலைகளின் நினைவு தினமான அடுத்த மாதம் 10 ஆம் திகதி திறந்து வைக்கப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# அறிவித்தல்

வடபகுதியின் இரட்சிப்பின் சத்தம் சபை என்ற பெயரில் நடைபெற்ற தேவ ஊழியங்கள் யாவும் தற்பொழுது விசுவாசிகள் சபையாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு நடைபெறுகின்றன என்பதை சகலருக்கும் அறியத் தருகிறோம். அத்துடன் இரட்சிப்பின் சத்தம் சபையின் பெயரால் ஊழியர்கட்கு வழங்கப்பட்ட சபை அடையாள அட்டை செல்லுபடியற்றவை என்பதையும் அறிவிக்கின்றோம்.

செயலாளர்,

**விசுவாசிகள் சபை.**

இல: 136, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[51722]

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
### பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
# வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் **28 - 12 - 97** ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10. 00 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் இருப்பின் 20-12-97 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளரிடம் சேர்ப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றேன். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ச. சத்தியசீலன்,
செயலாளர்.

[இ/2810]

# ஜி. சீ. ஈ. பரீட்சை அறிவுறுத்தல்கூட்டம்

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையின் போது கடமையில் ஈடுபடும் பரீட்சை மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள், சாதாரண நோக்குநர்கள் ஆகியோர் மேற்பார்வையை மையமாகக் கொண்டுபணியாற்ற வேண்டும்.

வலிகாமம் கல்விக் கோட்டப் பிரிவுகளில் பரீட்சைக் கடமைகளில் ஈடுபட உள்ள பரீட்சை மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள், பரீட்சை மண்டப இணைப்பாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டத்தின் போது கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் எஸ். சிவராஜா மேற்கண்டவாறு கூறினார்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் சாதனங்களாக தேசிய அடையாள அட்டைகள், தபாற்கந்தோர் அடையாள அட்டைகள், பாஸ்போட் ஆகியவை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

தெல்லிப்பழை, கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை கோட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான இக்கூட்டம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

(இ-152)

## ஏற்புத்தடை ஊசி மருந்து பற்றாக்குறை

நெல்லியடி, டிச. 11

மந்திகை மருத்துவமனையில் மீண்டும் ஏற்புத்தடை ஊசி மருந்துக்குத்தட்டுப்பாடு நிலவுகிறது.

அண்மையில் யாழ். பிராந்திய சுகாதாரப்பணிமனையினர் அனுப்பி வைத்த ஒரு தொகுதி ஊசி மருந்து முடிவடைந்தமையே இதற்குக் காரணமெனத் தெரிய வருகின்றது.

(ஐ-109)

## உணவுமுத்திரை விநியோகம்

யாழ். பிரதேசசெயலகம் தமது பிரிவுக்கு உட்பட்ட சகல கிராம அலுவலர்களுக்கும் தற்போது 19 ஆவது தொடர் உலர் உணவு நிவாரண முத்திரைகளை வழங்கி வருகிறது.

இந்த முத்திரைகளைப் பாவனையாளர்கள் தத்தமது பகுதிக் கிராம அலுவலர்களிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலாளர் து. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

(ஐ-36)

# அரசுக்கு எதிராக ஐ.தே.க. நம்பிக்கை இல்லாப்பிரேரணை

கொழும்பு, டிச. 11

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர ஐ. தே. க. முடிவு செய்துள்ளதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்கத்தில் பல்வேறு மட்டங்களிலும் ஊழல் மலிந்து காணப்படுவதாகவும் —

ஊழல் உட்பட மற்றும் பல விடயங்களை காரணம் காட்டி அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப் போவதாக ஐ. தே. க. பிரமுகர் தெரிவித்ததாகவும் —

அந்தச்செய்தி வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

இந்த பிரேரணைக்கான முன்னறிவித்தல் விரைவில் கொடுக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ - 3)

# 31 ஆம் நாள் நினைவு தினம்

## திருமதி நல்லதம்பி சோதி

(வவுனிக்குளம்)

பிறப்பு: **1919 - 06 - 24**

இறப்பு: **1997 - 11 - 10**

அன்னாரின் மரணச் செய்தியை அறிந்து இரங்கல் உரை மற்றும் பல வழியில் ஆறுதல் கூறியவர்களுக்கும் நன்றி நவில்கின்றதோடு 11 - 12 - 1997 அன்று ''ரஜனி இல்லம்'' கரணவாய் தெற்கில் நடைபெறும் சிரார்த்த தினத்தில் உற்றார், உறவினர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறும் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரின் இறப்பால் துயருறும்:

பிள்ளைகள்: சின்னம்மா, பூரணம் (அன்பு), சிவசோதி (மக்கள் வங்கி, பம்பலப்பிட்டி), ஜெயரட்ணம் (வவுனிக்குளம்), விஜயரட்ணம்.

மருமக்கள்:- கோபால், மார்க்கண்டு, காலஞ்சென்ற சிவக்கொழுந்து, (மத்திய வங்கி, கொழும்பு), இராசம்மா (வவுனிக்குளம்), புஸ்பலீலா

தகவல்:
ந. விஜயரட்ணம் (மகன்)

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(51676)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி கந்தையா சரஸ்வதி

தோற்றம்: **15-07-1919**

மறைவு: **23-11-1996**

நட்சத்திரம்: பரணி

11 — 12 — 1997

ஆலமரமென வளர்ந்திர்கள்
விழுதுகளென விதை பரப்பினீர்கள்
நாம் இன்று உலகெலாம் பரந்துள்ளோம்
ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

க. தவராசா,
மண்டுமண்டை,
சண்டிலிப்பாய்.

(இ/ 2295)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்து விட்டது!

## 'ஆற்றுகை'

நாடக அரங்கியலுக்கான இதழின்
மற்றுமொரு புதிய இதழ்

★ நாடகக் கலைஞர்களே!
★ நாடக அரங்கியலைக் கற்கும் மாணவர்களே!
★ நாடக, கலை, இலக்கிய ஆர்வலர்களே!

பிரதிகளுக்கு முந்துங்கள்!
இன்றுமுதல் எங்கும் கிடைக்கும்.

- திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (51727)


## இதய அஞ்சலி

### அமரர் ஆறுமுகம் இளையதம்பி

எமது பாடசாலையின் முதலாவது அதிபரும், இப் பாடசாலையின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் உறு துணையாக இருந்தவருமாகிய அமரர் ஆ. இளைய தம்பி அவர்களின் மறைவுக்கு எமது இதய அஞ்ச லியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழையமாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
யா/ நாயன்மார்கட்டு,
மகேஸ்வரி வித்தியாசாலை.

[51728]


## The Lyceum of English Studies

**Courses:**
1) Basic English
2) Business English
3) English for Employment
4) G.C.E. O/L Language and Literature

''Special Art Classes for School Leavers''
(Limited Admissions)

Commencement: 15-12-97

ஆண்டு 7 தொடக்கம் G.C.E. O/L
வரையிலான பின்வரும் பாடங்கள் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | — | திரு. இ.பி. சங்கர்<br>திரு. க. சுப்பிரமணியம் |
| தமிழ் | — | திரு. ஆர்த்திகன் |
| கணிதம் | — | திரு. கோணேஸ்வரன் |
| விஞ்ஞானம் | — | திரு. டார்வின் |
| சமூகக்கல்வி | — | திரு. முத்துலிங்கம் |
| வரைதல் | — | திரு. Art சங்கர் |

ஆரம்பம்: 15-12-97 திங்கட்கிழமை

தொடர்பு:-
The Administrating Officer,
The Lyceum of English Studies,
No 189, Adiapatham Rd,,
Thirunelvely, Jaffna.

(மருத்துவ பீடத்துக்கும், திருநெல்வேலி இந்து இளைஞர் சங்கத்திற்கும் இடையில்)

(51654)



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்.
REG. No. 12141

O/L வகுப்புகளுக்கு
தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

O/L ஆண்டு 10-ம், 9-ம் வகுப்பிற்கு
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
14-12-97 - 9 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. சுதாகர், திரு. புவிராஜ் |
| கணிதம் | — | திரு. தயாளன், திரு. அற்புதராஜ் |
| சமூகக்கல்வியும் வரலாறும் | — | யாழ். முன்னணி ஆசிரியர் |
| ஆங்கிலம் | — | திரு. விஸ்வநாதன் |
| தமிழ் | — | திரு. ஜெயபரன் |
| வர்த்தகம் | — | திரு. கருணாகரன் |
| சமயம் | — | திரு. தயா |

ஆண்டு 6-ம், 7-ம், 8-ம் புதிய பிரிவு
ஆரம்பம்: 14 — 12 — 1997 மாலை 2 மணி

கணிதம்: திரு. தயாளன், தமிழ்: திருமதி பிரபாவதி
விஞ்ஞானம்: திரு. தியாகலிங்கம்
வரலாறு: செல்வி நிர்மலா ஆங்கிலம்: திரு. ரதீஸ்வரன்

★ கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒரே நிறுவனம்.
★ மாதாந்தப் பரீட்சைகளும் நடைபெறும்.


# மன்ன...

(மூன்றாம் பக்கத் தொடர்)

தரப்பு பின்னர், பீரங்கி அழிப்புப் பற்றிய தகவலை தமது அறிவிப்பில் தவிர்த்துக் கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால் இராணுவ விமர்சகர்கள் ஒரு கேள்வியை கேட்கத் தவறவில்லை.

புலிகளிடம் உள்ள 120 எம். எம். மோட்டார் ஷெல்களோ, 122 எம். எம். ஹொவிட்ஸர் பீரங்கிகளோ பத்துக்கிலோ மீற்றரிலும் விட கூடுதலான தூர வீச்செல்லையைக்கொண்டவை. எனவே படையினரின் முன்னணிக் காவலரண்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டுமானால் அத்தகைய காவலரண்களில் இருந்து பத்துக் கிலோ மீற்றருக்கு அப்பால் இருந்துகொண்டும் புலிகளால் அதனைச் செய்ய முடியும். ஆகையால் பூநகரிப் பகுதியில் உள்ள படையினரின் முன்னணிக் காவலரண்களில் இருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் ஒரு பீரங்கித் தளத்தை — அதுவும் வானத்திலிருந்து இலகுவாக அடையாளம் காணக்கூடிய ஒரு தளத்தை — புலிகள் பேணுகின்றார்கள் என்றால் அதன் உண்மைத் தன்மையைக்குறித்து, படையினரின் உயர் மட்டத்துக்கு சந்தேகம் ஏதும் வராமல் போனது ஏன்?

படையினரின் முன்னணிக் காவலரண்களுக்கு நெருக்கமாக பீரங்கி நிலைகளை வைத்திருப்பது அவற்றைஇழப்பதற்கு வாய்ப்பளித்துவிடும். என்பதால் — புலிகளுக்கு அது தெரிந்திருந்தும் முன்னணிக் காவலரணுக்குச் சமீபமாக, ஐந்து கிலோ மீற்றர் தொலைவுக்குள் ஒரு பீரங்கித் தளத்தை அவர்கள் பேணுவது போல் வானிலிருந்து கிடைக்கும் உளவுப் படங்கள் காட்டினாலும் கூட — அது குறித்து அரசுப் படை அதிகாரிகள் ஒன்றுக்கு இரண்டு தடவைகள்சிந்தித்து உஷாராகாதது ஏன்?

—இதுதான் இராணுவ ஆய்வாளர்கள் எழுப்பும் கேள்வியாகும்.

மன்னகுளம் இழப்புக் குறித்து ஆராய இராணுவ விசாரணை மன்றம் ஒன்று அமைக்கப்படுமானால் அந்த விசாரணை மன்றத்திலும் இக் கேள்வியே முக்கியமாக எழக்கூடும்.

மன்னகுளத்தில் உயிரிழந்த அல்லது செயலிழந்த துருப்புகள் 53ஆவது படையின் விசேட அதிரடிப் பயிற்சி பெற்ற கொமாண்டோக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. யாழ். குடாநாட்டைக் கைப்பற்றிய 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையிலும் இந்தக் கொமாண்டோக்களே களத்தில் முன்னணியில் நின்று சமர் புரிந்து படைத்தரப்புக்கு வெற்றி வாகையைச் சூடிக் கொடுத்தவர்கள்.

இந்தப் படையணி மன்னகுளம் தாக்குதல் இழப்புகளால் முற்றாக சீர்குலைந்து போய்விட்டது.

விசேட அதிரடிக் கொமாண்டோ படையணியின் கட்டளைத் தளபதி லெப்டினன்ட் கேணல் நிலந்தா லக்மல் ஸ்ரீமானே இச்சமரில் உயிரிழந்து விட்டார். காயமுற்றவர்களுள் ஒரு லெப்டினன்ட் கேணலும், முதலாவது பட்டாலியனின் கட்டளை அதிகாரியும் அடங்குகின்றனர்.

யுத்த முனையில் முன்னணியில் நின்று பிரதேசங்களைக் கைப்பற்றித் தரும் முக்கிய படையணியின் சீர்குலைவு 'வெற்றி உறுதி' நடவடிக்கையை தாமதப்படுத்தும் என்பது மட்டும் நிச்சயம்.

மன்னகுளத்தில் புலிகளின் இரு பீரங்கி நிலைகள் தகர்க் [illegible] வெளியான தகவல் தவறு என்றும் — பல [illegible] பீரங்கி நிலைகளை வைத்து படையினரைப் புலிகள் திசை திருப்பியதாகவும் —

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'தஐலண்ட்' ஆங்கில நாளிதழின் இராணுவச் செய்தியாளர் சமிந்திரா பெர்டினான்டோ தெரிவித்தார்.

''மன்னகுளத்தில் சம்பந்தப்பட்ட இராணுவ பட்டாலியன் சீரமைக்கப்படும். ஆனால் அதற்கு காலம் பிடிக்கும்'' என்று இராணுவ அதிகாரிகள் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியில் புலிகளுக்கும் அரசுத் துருப்புகளுக்கும் இடையில் நடக்கும் சமர் ''பாம்பும் ஏணியும்'' போல இருதரப்புக்கும் மாறி மாறி வெற்றி தோல்விகளை — ஏற்ற இறக்கங்களை — தந்து கொண்டிருக்கின்றது. இறுதி வெற்றி யாருக்கு என்பதை காலம்தான் கூறமுடியும்.

அது வரையில் அவ்வப்போது சமர்களில் கிடைக்கும் வெற்றிகள் எத்தரப்புக்கும் நிலையானது என்று கூறிவிட முடியாது என்பதுதான் யதார்த்தம். ★

## நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை

நெல்லியடி, டிச. 11

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பணி புரியும் தற்காலிக ஊழியர்கள் 17 பேருக்கு கடந்த ஏழு வருடங்களாக நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

கிளை முகாமையாளர்கள், விற்பனையாளர்கள், எழுதுநர்கள். மேற்பார்வையாளர்கள் போன்ற பதவிகளையுடையவர்களே இதுவரை நிரந்தர நியமனம் பெறாத நிலையில் பணிபுரிகின்றார்கள். (ஐ-109)

## சந்தேக நபர் வெட்டிக் கொலை

கொழும்பு. டிச. 11

காலியிலுள்ள கராப்பிட்டிய மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த சந்தேக நபர் ஒருவர் கடந்த ஞாயிறு இரவு ஆஸ்பத்திரி படுக்கையில் வைத்து வெட்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஆசிரியை
திருமதி பே. தே. பாலேந்திரா
அவர்களின் அன்னையாகிய

### திருமதி கிறேஸ் செல்லமணி யேசுதாசன்

கர்த்தருக்குள் நித்திரையானதையிட்டு கவலையடையும் அவர் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/கொழும்புத்துறை இ. ம. வி.
(51742)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் வ. க. நடராசா

அச்சுவேலி கதிரிப்பாயைச் சேர்ந்த அமரர் வ. க. நடராசா அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஆதவன் குடும்பம்
பருத்தித்துறை.

[51737]

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியம்

10 - 12 - 1997 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப் பட்ட பரிசு இலக்கங்கள் வருமாறு!

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 5407 |
| இரண்டாம் பரிசு: | 6599 |
| மூன்றாம் பரிசு: | 0900 |

ஆறுதல் பரிசு பெறும் இலக்கங்கள்

| | |
|---|---|
| 3976 | 0105 |
| 2779 | 5493 |
| 6823 | 5200 |
| 4918 | 6144 |
| 0581 | 4605 |

குறிப்பு: பரிசுகள் மன்றத்தின் வருடாந்த சஞ்சிகையான 'வரவு' வெளியீட்டு விழாவின் போது வழங்கப்படும்.

வர்த்தக மாணவர் ஒன்றியம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.
(51730)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலக பதில் மேற்பார்வை
குடும்பநல உத்தியோகத்தர்
செல்வி இலக்குமிதேவியின்
அருமைத் தந்தை

### கோணாமலை சின்னத்துரையின்

மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பருத்தித்துறை
சுகாதார வைத்திய அதிகாரி,
பணிமனை ஊழியர்கள்,

(51724)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நூலகம்

# உதயன்

## வவுனியா "கைதிகள்"

வவுனியா நலன்புரி நிலையங்களில் — அகதி முகாம்களில் — தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளை வெளியே செல்ல அனுமதிப்பது குறித்து இன்னும் ஒரு மாத காலத்தில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படுமாம்.

வன்னி நிலைமை குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இது குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

வவுனியா அகதி முகாம்களில் கைதிகள் மற்றும் குற்றச் செயல் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் போன்று தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் வன்னியில் இருந்து வந்தவர்கள்.

வன்னியில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்ததால் பாதுகாப்பு கருதிச் சென்றோரே இவர்கள். போர் நடைபெறாத பிரதேசங்களில் உள்ள தமது உறவினர்களுடன் சென்று தங்குவதே இவர்களில் 75 சதவீதமானோரின் விருப்பம்.

யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கைகள் ஓய்ந்து போயிருப்பினும் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் அதிக வீதத்தினர் இங்கு திரும்பி வர விரும்பவில்லை. திரும்பி வந்து மீளக் குடியேற விரும்புபவர்கள் தானும் இங்கு வருவதற்குக் கடந்த ஆறு மாதங்களாகப் போக்கு வரத்து வசதி எதுவும் இல்லை.

இத்தகைய காரணங்களால் வவுனியாவில் உள்ள அகதி முகாம்களில் ஆயிரக்கணக்கானோர் கடந்த ஒரு வருட காலமாகக் ''கைதி'' வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு சில மணி நேரம் மட்டும் வெளியே சென்று வரலாம்; அவ்வளவுதான்.

மாதக்கணக்காக, வருடம் முழுவதும் அகதி முகாம்களில் முடங்கிக் கிடப்பதால் மக்களின் உடல் நலம் மட்டுமன்றி உள நலமும் குன்றிப்போகின்றது. இங்கு தங்கியுள்ள இளைஞர்கள் வதைகளுக்கு ஆளாவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்திருந்தது.

இந்த மனிதாபிமான விவகாரத்தை அரசாங்கம் தனது வசதிக்கு ஏற்றாற் போலவே கையாளுகிறது. தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் தாம் விரும்பிய, தமக்கு வசதியான இடத்திற்குச் சென்று வாழ்வதற்கு அனுமதி வழங்க மறுக்கப்படுகிறது.

வழமையான ''பாதுகாப்புக் காரணம்'' கருதி அகதிகளாக வந்தோர் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்! வவுனியா முகாம்களில் உள்ளோர் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கு ''பாஸ்'' முறை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் அதற்கான நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் அனந்தம். அகதிகளின் கைகளுக்கு அப்பாற்பட்டவை.

நிபந்தனைகள், விதிமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டாலும் அனுமதி இலகுவில் கிடைத்து விடாது, மாதக் கணக்காகக் காத்துக் கிடக்க வேண்டும். தரகர்களுக்குப் பணம் கறந்தால் தான் இலகுவில் 'பாஸ்' பெறலாம் என்ற நிலை.

வன்னியில் இருந்து அகதிகள் வவுனியா செல்லத் தொடங்கியும், அவர்கள் அங்குள்ள முகாம்களில் அடுக்க வைக்கப்படத் தொடங்கியும் பதினைந்து மாதங்கள் கடந்து விட்டன.

ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்கட்டுமே என்ற தோரணையிலா முடிவு எடுக்க மேலும் ஒரு மாத அவகாசம்?

அல்லது ஒரு மாதத்திற்குள் வவுனியா - கிளிநொச்சி பாதை திறக்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கையிலா?

தமிழர்களின் நாளாந்த வாழ்வுரிமை இவ்வாறு நசுக்கப்படுவது எந்த விதத்தில் நீதியும், நியாயமும், சமத்துவமும் ஆகும்?

# எம்செல்வங்கள் இருக்கும் இடத்தை உடன் எமக்கு தெரியப்படுத்துங்கள்

## ஜனாதிபதியிடம் பெற்றோர்கள் மகஜர்

கைதாகித் தகவல் தெரியாமல் இருக்கும் எமது செல்வங்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை எமக்குத் தெரியப்படுத்தி எங்கள் துயரைத் துடையுங்கள்.

கைதாகிக் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளது.

நல்லூர் கந்தசுவாமிகோயில் முன்பாக நேற்று நடத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றை மேற்படி சங்கத்தினர் யாழ். அரச அதிபரிடம் கையளித்தனர்.

அந்த மகஜரிலேயே முன் கண்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு 15 மாதங்களுக்கு மேலாக தகவல் அற்று இருக்கும் செல்வங்களின் நிலை குறித்து அவர்களின் பெற்றோர், மனைவிமார், உறவினர் அனுபவிக்கும் துயரங்கள் எழுத்தில் அடங்கா. மன ரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதிக்கப்பட்டு தங்கள் செல்வங்களின் நிலையை அறியாது நடைப்பிணங்களாக வாழ்வா. சாவா என்ற விரக்திக்கே தள்ளப்பட்டு சொல்லொணாத் துயருடன் வாழ்கிறார்கள்.

குடும்பத்தைப் பொறுப்பேற்று நடத்திய பிள்ளைகள் கைதாகி இருக்கிறார்கள். குடும்பத் தலைவர்கள் கைதாகி இருக்கிறார்கள். படித்துப் பட்டம் பெற இருந்தவர்கள் கைதாகி இருக்கிறார்கள். பாடசாலை செல்லும் மாணவர்கள் கைதாகி இருக்கிறார்கள். திருமணமாகி இல்லற வாழ்வு தொடங்கியவர்கள் கைதாகி இருக்கிறார்கள். அரசபணி புரிவோர் கைதாகி இருக்கிறார்கள். அன்றாடம் உழைத்துச் சீவிக்கும் வறிய குடும்பஸ்தர்கள் கைதாகி இருக்கிறார்கள். தனியார் துறைகளில் கடமை ஆற்றுவோர் கைதாகி இருக்கிறார்கள்.

அம்மையாரே! இவர்கள் அனைவரும் பலர் மத்தியில் இராணுவத்தால் பல சந்தர்ப்பங்களில் கைதானவர்கள் ஆனால் 15 மாதங்களுக்கு மேல் கடந்தும் இவர்களுக்கு என்ன ஆனது, இவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டு உள்ளார்கள் என்பதை அவரவரது உறவினர்கள் அறிய பல முயற்சிகள் எடுத்தும் முடியாதுள்ளது. அவர்களின் சோகத்துயருறும் நிலையை மனதில் கொள்ளுங்கள். எமது செல்வங்கள் இருக்கும் இடங்களை அறியத் தாருங்கள். அவர்களிடம் இருந்து கடிதத் தொடர்பை ஏற்படுத்தித் தாருங்கள். குற்றவாளிகளாகக் கருதும் பட்சத்தில் நீதியின் முன் நிறுத்துங்கள். இனிமேலும் இப்படியான கைதுகள் நடைபெறாது இருக்கச் செய்யுங்கள். இப்பணிவான மனித நேயமான எமது கோரிக்கைகளை நிறைவேற்றி எமது துயரைத் துடையுங்கள்.

சர்வதேச மனித உரிமைகள் தினமாகிய இன்று 10.12.97 கைதாகிய செல்வங்களின் உறவினர்கள் ஒன்று கூடி எமது செயலகத்தில் இருந்து அரச அதிபர் செயலகத்திற்கு மௌன ஊர்வலமாகச் சென்று அரச அதிபர் ஊடாக தங்களுக்கு மகஜர் சமர்ப்பிக்கத் தீர்மானித்திருந்தோம். அதன் அடிப்படையில் ஊர்வலத்திற்கான அனுமதியை அரச படை அதிகாரியிடம் பெறச் சென்றபோது அது மறுக்கப்பட்டது எமது செல்வங்கள் இருக்கும் இடம் அறியாது ஏங்கித்தவிக்கும் எமக்கு மிகுந்த மன வேதனையைத் தருகிறது என்பதை தங்களுக்கு பணிவன்புடன் கூறிக் கொள்கின்றோம் — என்று உள்ளது.

(ஐ-111)

# மாவையில் நாளை கார்த்திகை திருவிழா

## சகலரும் செல்ல அனுமதி என அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிச. 11

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை திருக்கார்த்திகை விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆலய தர்மகர்த்தா பிரம்மஸ்ரீ. சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தெரிவித்தார்.

சைவ சமயப் பெருமக்கள் மாவையம்பதிக்குச் சென்று தத்தம் வழிபாடுகளையும், நேர்த்திக்கடன்களையும் எதுவித தடையுமில்லாமல் மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் —

சகலரும் அங்கு போக அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

# காலி உல்லாச ஹோட்டலுக்குள் ஆயுதக் குழு புகுந்து அட்டகாசம்

கொழும்பு, டிச. 11

காலியில் உள்ள உணவடுன பகுதியில் அமைந்துள்ள உல்லாச ஹோட்டல் ஒன்றுக்குள் கடந்த திங்கள் அதிகாலை 2.00 மணியளவில் அத்துமீறி நுழைந்த ஆயுதக் கும்பல் ஒன்று அங்கிருந்த ஹோட்டல் உரிமையாளர், அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் சிப்பந்திகள் ஆகியோரைக் கட்டி வைத்து விட்டு சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான பணத்தையும், பொருள்களையும் அபகரித்துச் சென்றுள்ளது.

கொள்ளையர்களிடம் இயந்திரத் துப்பாக்கிகள் இருந்தன எனவும் ஆனால் அங்கு தங்கியிருந்த உல்லாசப் பயணிகளை அவர்கள் துன்புறுத்தவில்லை எனவும் தெரிவிக்கப்படுட்ள்ளது.

[ஐ-10]

# தினமும் 10 வழக்குகள் பதிவு செய்யுங்கள்

## போக்குவரத்துப் பொலீஸாருக்குக் கட்டளை

கொழும்பு, டிச. 11

கொழும்புப் பிரதேச போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த மோட்டார் சைக்கிளில் கடமை புரியும் சகல பொலீஸ் உத்தியோகத்தர்களும் நாளொன்றுக்கு கட்டாயமாக ஆகக் குறைந்தது 10 வழக்குகள் பதிவு செய்ய வேண்டும்.

போக்குவரவுப் பிரிவைச் சேர்ந்த மூத்த பொலீஸ் அத்தியட்சகர் பி. ஏ. டி. ஏ. விஜேவர்த்தன இவ்வாறு கட்டளையிட்டுள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் அரைவாசி வழக்குகள் காலையிலும் மிகுதி மாலையிலும் பதிவு செய்யப்படவேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சாரதிகள் எவ்வித தவறு இழைக்காவிடினும் அவர்கள் மீது ஏதோ ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தி வழக்குத்தாக்கல் செய்ய வேண்டியுள்ளது எனவும் போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸார் தெரிவிக்கின்றனர் என ''திவயின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-10)

# ஏழாலையில் மிதிவெடியில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், டிச. 11

காணியைத் துப்புரவு செய்த சமயம் மிதிவெடி ஒன்று வெடித்ததில் ஒருவர் உடல் முழுவதும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த துரைசிங்கம் தெய்வேந்திரம் (வயது 32) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

நேற்று முன்தினம் வீட்டுக் காணியைத் துப்புரவு செய்து கொண்டிருந்த சமயம் இவரது மண்வெட்டி மிதி வெடியில் பட்டு மிதிவெடி வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-103-9)

# சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், டிச. 11

காரைநகர் திக்கரைமுருகன் ஆலயத்தில் திருக்கார்த்திகைத் தீபத்தை ஒட்டி நாளை வெள்ளிக்கிழமை அபிஷேகமும் ஆராதனைகளும் இடம் பெறும். (ஐ)

★ ★ ★

யாழ். குடாநாட்டில் உள்ள சகல முருகன் ஆலயங்களிலும் நாளை வெள்ளிக்கிழமை மாலை திருக்கார்த்திகை குமராலய தீபம் உற்சவம் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனையுடன் நடைபெறும்.

அநேக ஆலயங்களில் சுவாமி வீதிவலம் வருதலும், ''சொக்கப்பானை'' எரித்தலும் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ சிவன் கோயிலில் இன்று வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு பிரதோஷ விரதம் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெற்று சுவாமி வீதிவலம் வருவார்.

(ஐ-30)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு சுன்னாகம், மயிலங்காடு தம்பு சற்குருநாதன் குழுவினர் வழங்கும் ''பக்திப்பாடல் இசை நிகழ்ச்சி'' நடைபெறும்.

சிவானந்தவாரிதி வ குமாரசாமி ஐயர் அறிமுகவுரையை நிகழ்த்துவார்.

(ஐ-30)

# மாதாந்த அறிவியல் கருத்தரங்கு

இணுவில் தெஸ்பியன் கலை வட்டத்தின் மாதாந்த அறிவியற் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இம்முறை இடம்பெற உள்ள 12 ஆவது கருத்தரங்குத் தொடரில் ''திருவடி சூட்டு படலம்'' என்ற தலைப்பில் ஆறு. திருமுருகன் கருத்துரை வழங்குவார். (இ)

# மாங்குளம் மீது கிபிர் தாக்குதல்!

வவுனியா, டிச. 11

மாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் காலை கிபிர் விமானங்கள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் குண்டு வீச்சுக்களை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

சேதவிவரம் குறித்து தகவல் எதுவும் வெளியாகவில்லை.

அதே நேரம் —

வன்னி விளாங்குளம், வவுனிக்குளம் ஆகிய பகுதிகள் மீது 'வெற்றி உறுதி' துருப்பினர் ஷெல் தாக்குதல் நடத்தி வருவதாகவும் —

இதன் காரணமாக அப்பகுதியில் உள்ள மக்கள் அடைமழைக்கு மத்தியில் இடம் பெயர்ந்து வருவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

முழங்காவில் பகுதியில் உள்ள பாடசாலையில் மக்கள் தஞ்சமடைந்துள்ளதாகத் தெரிய வந்தது. (உ-164-3)

## நாளை

**கார்த்திகை 27**

வெள்ளிக்கிழமை

திதி: திரயோதசி

முற்பகல் 11- வரை 21.

நட்சத்திரம்: கார்த்திகை

பின் இரவு 12.44 வரை.

திருக்கார்த்திகை விரதம்

குமாராலய தீபம்

சுபநேரம்: 6 20-7.50

ராகுகாலம்: 10.50-12 20

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சந்தேகநபர்...

(ஆறாம் பக்கத் தொடர்)

டிக் கொல்லப்பட்டார்,

இந்த சந்தேக நபர் இரு கொலைகள் மற்றும் பல கொள்ளைகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார். அச்சமயம் நோய்வாய்ப்பட்ட இவர் சிறைச்சாலைப் பாதுகாவலர்களின் பாதுகாப்பில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோதே இச் சம்பவம் இடம்பெற்றது.

(ஐ-10(

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோப்பாய் ஐக்கிய விளையாட்டு
கலாசாரக் கழகம் நடத்தும்

**மாபெரும் போட்டிகள்**

(வடமாகாண ரீதியானது)

1. கரபந்தாட்டம் - செற் அப் கேம்
2. மென்பந்து கிரிக்கெட் - 20 ஓவர்கள்

பிரவேசக் கட்டணம்

கரபந்தாட்டம் - ரூபா - 100
மென்பந்தாட்டம் - ரூபா - 100

விண்ணப்ப முடிவு திகதி – 25 - 12 - 1997

தொடர்பு:- செயலாளர், கோப்பாய் ஐக்கிய விளையாட்டு கலாசாரக் கழகம்.
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி,
கோப்பாய்.

சி.சுசீந்திரன்
(செயலாளர்)

(51740)

# திருமலைத் துறைமுகத்தைத் தாக்க மூதூரில் கடற் கரும்புலிகள் அணி

## கடற்படை - இராணுவம் கூட்டாகத் தேடுதல்

திருகோணமலை துறைமுகத்தைத் தாக்கும்நோக்கில் கடற் கரும்புலிகளின் குழுவொன்று மூதூர்ப் பகுதியில் முகாமிட்டு இருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து கடற்படையினரும் இராணுவமும் இணைந்து மூதூர்ப் பகுதியில் கூட்டு நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளதாக கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதி கடற்படைத்தளபதி கொமடோர் சரத்வீரசேகரா தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் தொலைத் தொடர்புத் தகவல்களை ஒட்டுக்கேட்ட போதே ரகசிய புலனாய்வுப் பிரிவினருக்கு இத் தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து திருகோணமலை துறைமுகம் மற்றும் கப்பல் கட்டும் தளம் ஆகிய பகுதிகளின்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் கடலில் விசேடகண்காணிப்பு பணியில் கடற்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## யாழ். நகரில் மோட்டார் சைக்கிள் திருட்டு!

நெல்லியடி, டிச. 11

மீன் சந்தைக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது.

இத் துணிகர திருட்டு நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் இடம்பெற்றது.

மோட்டார்சைக்கிள் உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். (இ-109)

## கூட்டணி..

(முதலாம் பக்கத் தொடர்)

தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்வரும் திங்கட்கிழமை இறுதித் தீர்மானம் எடுக்கும் என தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)

## வௌசி...

(முதலாம் பக்கத் தொடர்)

தமது கடமையில் ருந்து தவறிவிட்டார் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

வழக்கை நேற்று ஆராய்ந்த ஹம்பாந்தோட்டை நீதிபதி சி. வி. ராஜபக்ஷ எதிர் மனுதாருக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்புமாறு உத்தரவிட்டார்.

விசாரணைகள் இம்மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகும். (இ-3)

## கொழும்பிலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொண்டனர்.

யாழ். நகரில்

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்களின் விவரங்களை வெளியிடக் கோரிக்கை தாகி தகவல் தெரியாதோர் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியும் இணைந்து நேற்றுக்காலை 9 மணி முதல் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தை நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் நடத்தின.

தகவல் தெரியாதுள்ளவர்களின் பாதுகாவலர்கள் சுமார் 500பேர் இதில் கலந்து கொண்டனர்.

ஈ. பி. டி. பி., புளொட், ஈ பி. ஆர். எல். எவ். பிரதிநிதிகளும் இப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கினார்கள்.

மாலை 3 மணியளவில் இந்த உண்ணாவிரதத்தை ஈ.பி. டி.பி. பிரமுகர் என். லோகன் முடித்து வைத்து உரையாற்றினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், கைதாகி தகவல் தெரியாதவர்களின் விடுதலைக்காக எமது அமைப்பாளர் வி. கே. ஜெகன் எடுத்த தீவிர முயற்சியின் காரணமாக பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்திக்க ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு செய்துள்ளார். எனவே பாதுகாவலர்கள் உணர்ச்சி வசப்படாமல் சாத்வீகமான வழியில் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

யாழ். மறை மாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு சார்பில் அருட்திரு. இரா. சூசைதாசனும் மற்றும் பலரும் உரையாற்றினர்.

வந்தாறு மூலையில்

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறு மூலையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் ஆயிரம் பேர் வரை கலந்து கொண்டனர்.

வந்தாறு மூலை பிள்ளையார் கோயிலில் இருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் புறப்பட்டுச் சென்று சுமார் 500 யார் தூரத்தில் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் பெரிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் படையினர் மேற்கொண்ட சில தடை நடவடிக்கைகளால் திட்டமிட்டபடி நடத்த முடியவில்லை என்று ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது. (இ-3-7-8-51-103)

## சூடுக்...

(முதலாம் பக்கத் தொடர்)

டுக் காயத்துடன் நேற்று முன்தினம் படையினரால் ஒப்படைக்கப்பட்டது.

வதிரி, இரும்பு மதவடிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் இவர் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. (இ-104-173)

## அந்தியேட்டி அழைப்பு

அன்புடையீர்!

11 – 11 – 1997 அன்று காலஞ் சென்ற திகிரி புலோலி கிழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த அமரர் திருமதி பொன்னம்மா சுப்பிரமணியத்தின் நினைவஞ்சலி வைபவம் **11 - 12 - 1997** வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொழும்பு, பம்பலப்பிட்டி தொடர்மாடி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி நினைவஞ்சலி வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
மகன் சு. நடராசா
பேரப்பிள்ளைகள் -
சுகந்தி, பவானந்தன்,
சுகன்யா, சுபாசினி, பவநீதன்,
பூட்டப்பிள்ளைகள் -
தர்சிகா, சௌசிகா,
குலெபிகா, ராகுலன்,

36A காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு 6.
(சி/2214)

தகவல்:
சு. நடராசா
தபால் அதிபர்(Gilani A.P.O.)
வெள்ளவத்தை.



நாடக அரங்கக் கல்லூரி

கருத்தரங்குத் தொடர் – 9

— காட்சிப்படுத்தல் —

ஒ
பரிசோதனைக் களம்

13-12-97 சனி 3.30 மணி

யா/ கந்தர்மடம்
சைவப்பிரகாச வித்தியாலயம்

ஆர்வலர்களைக்
கலந்து கொள்ளுமாறு
வேண்டுகின்றோம்.

– இயக்குநர்

(சி/2309)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
19 — 04 — 1921



அம்பாள் அடியில்
11 — 11 — 1997

### அமரர் க.வே. பரமலிங்கம் ஜே.பி.
### ( நயினாதீவு )

( செயலாளர், நயினை ஸ்ரீ நாகபூஷணி ' அமுத சுரபி ' அன்னதான சபை )

எமது குடும்ப விளக்காய் ஒளி வீசி, நாட்டுக்கு நற்சேவை புரிந்து 11 - 11 - 97 இல் அம்பாள் அடியினைச் சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் மூலமும் கடிதங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும், பலவழிகளிலும் எமக்கு உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் 9-12-97 இல் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று ( 11-12-1997 ) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்

25, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(51743)

எமது
புதிய வெளியீடு
அருண்பாண்டியன்,
ரோஜா நடித்த
"கடவுள்"

ஒறிஜினல் வெளியீடு
சேவகன்
துணிவே துணை
நம்நாடு
எங்க வீட்டுப்பிள்ளை
நீதிக்குத் தலைவணங்கு
இதய வீணை

அடுத்த வெளியீடு
ரோஜா மலரே

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/2322)

## மரண அறிவித்தல்

### திருமதி பூமாதேவி நாகரட்ணம் (குஞ்சு)

பொன்னையா லேன், ஆனைக்கோட்டையை வதிவிடமாகக் கொண்ட திருமதி பூமாதேவி நாகரட்ணம் அவர்கள் 08-12-1997 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற தபாலதிபர் நாகரட்ணத்தின் அன்பு மனைவியும், இலட்சுமிகாந்தன் (அவுஸ்திரேலியா), ஜெயலட்சுமி, ஹரிலட்சுமி, கதிர்காமநாதன் (மாத்தளை), இரவீந்திரன்(டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோபாலசிங்கம் (தலவாக்கொல்லை) அவர்களின் வளர்ப்புத் தாயாரும், திருமதி ஜெகதாம்பிகை இலட்சுமிகாந்தன், சிவயோகராஜா(ஆசிரியர்), சிவலிங்கம், திருமதி ஸ்ரீகாந்தராணி கதிர்காமநாதன், திருமதி சசிகலா இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11-12-97) வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. நாகரட்ணம்
(Retired Post Master)

பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.
(51721)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11-12 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org